1971 டிசம்பர் 18]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். அரசு ஆதரவில் இயங்கி வரும் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஆண்டுதோறும் கிராமியக் கலைக் குழுக்களுக்கு உதவிமான்யம் வழங்கி வருவதுடன், இத்துறையில் சிறந்த கலைஞர்களை ஆண்டுதோறும் தேர்ந்தெடுத்துப் பாராட்டும், விருதும் வழங்கி கௌரவித்து வருகிறது.

Advisory Committee on Leprosy

* 557 *Q.*—THIRU S. SANGUMUTHU THEVAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the All India Leprosy Advisory Committee met at Madras on or about the 10th August 1971;

(*b*) whether the representatives of the State Government attended this meeting ; and

(*c*) if so, the stand taken by them?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) மாநில அரசிற்கு அதிக மானியங்கள் உரிய காலத்தில் அளிக்கவும், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தொழு நோய் சிகிச்சை நிலையங்களைப் பராமரிப்பதற்கு ரொக்க உதவித் தொகையும் மருத்துவ மனைகளில் தொழுநோய்ப் பிரிவு கட்டுவதற்கு உதவி அளிக்குமாறும், மத்திய அரசைக் கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறது.

DR. H. V. HANDE : Sir, will this Government come forward to separate the number of patients who are to have treatment in the hospital and those patients who are to have ambularory treatment, that is, treatment as out-patients and whether it is possible to sit down and find out how many are there in this group and how many in that group, so that the expenditure for the Government can also be reduced by concentrating on patients who can come as out-patients, especially because most of the cases can be cured according to the modern treatment as out-patients ? Will this Government see that eradication of leprosy takes proper footing by concentrating along with the in-patients/out-patients also and if so, may I know the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த நோய் நீக்கப் பணிகள் என்பது பரவலாக வேறு வேறு கட்டங்களில் பல்வேறு மாவட்டங்களிலும் நடைபெறுகின்றன. புற நோயாளிகளாக அவர்கள் தங்கள் இல்லத்திலிருந்துகொண்டே மருத்துவம் செய்யப்படும் வகையிலும், 'சர்வே அண்ட் எஜுகேஷன் ட்ரீட்மெண்ட்' என்று பரா-மெடிகல் ஒர்க்கர்கள் மூலமாகப் பல பகுதிகளில் ஏராளமாக வேலைகள் நடைபெறுகின்றன. 'லெப்ரஸி கண்ட்ரோல் யூனிட்' என்பது சற்று விரிவானது. அதில்

வேறுவிதமான சிகிச்சை அளிக்கப்படுகிறது. 'லெப்ரஸி ட்ரீட்மெண்ட் அண்ட் ஸ்டடி ஸெண்டர்' என்ற அமைப்பும் இருக்கிறது. அதைப்பற்றியும் என்னென்ன செய்யலாம் என்று அரசு யோசிக்கிறார்கள். திருமணியில் லெப்ரஸி ஸானடோரியம் என்பது இன்னும் சற்று பெரிய அளவில் ஆராய்ச்சி செய்து பணியாற்றுகிறார்கள். எல்லா மருத்துவ மனைகளிலும். ஒரு பிரிவில் லெப்ரஸிக்கு அறுவை சிகிச்சை போன்றவை தேவையான முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது இன்னும் இன்ஃபெக்ஷஸ், நான்-இன்ஃபெக்ஷஸ் என்ற அடிப்படையிலும் சிகிச்சை செய்யப்படுகிறது. நிதி அதிகம் இருக்குமானால் இவற்றை விரிவுபடுத்தலாம்.

திரு. கே. ஏ. வகாப் : தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோயானது தமிழ் நாட்டில் வடார்க்காடு மாவட்டத்தில்தான் அதிகமாக இருப்பதாகக் கூறப்படுகிறதே, அந்த மாவட்டத்தில் மட்டும் அப்படி இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அரசு ஆராய்ந்து பார்த்திருக்கிறதா ? அது மட்டுமல்லாமல், தனிப்பட்டவர்கள் நடத்தும் மருத்துவ நிலையங்களுக்கு வெளிநாட்டவர்கள் நடத்துபவைகளுக்கு அரசு ஏதாவது மானியம் கொடுக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட தொழுநோய் வடார்க்காடு, தென்னார்க்காடு, செங்கல்பட்டு, ஆகிய மூன்று மாவட்டங்களிலும் பரவலாக இருக்கிறது என்பது ஒரு கருத்து. பரவலாக பல்வேறு காரணங்கள் இருக்கின்றன. இந்த நோய் வருவதற்கு. குறிப்பிட்ட காரணத்தைத் தெரிவிக்க இயலாது. ஆனால் பிணி தீர்க்கும் பணியை மேற்கொண்டிருக்கிற பல்வேறு அமைப்புகளில், வெளி நாட்டவர்கள் சிறந்த பணியாற்றுகிறார்கள் என்பது உண்மை. நேற்றுக் கூட, அவர்களுடைய ஆலோசனைக் குழுக் கூட்டம் நடந்து. நான் அவர்களைப் பாராட்டி நன்றி தெரிவித்திருக்கிறேன். மிகப் பெரிய அளவில் தொண்டு உணர்ச்சியோடு அவர்கள் ஆற்றும் பணி நிதியால் ஆற்றக் கூடியது அல்ல. இந்த அரசு அவர்களுக்கு மத்திய சர்க்காருடைய ஒத்துழைப்போடு, உதவி செய்ய வேண்டிய முயற்சிகள் எடுக்கிறது.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, இந்தத் தொழு நோய் மருத்துவ மனைகளை பல மிஷனரிகள் நடத்துகிறார்கள். அவர்களுக்கு அரசாங்கத்திலிருந்து உதவித் தொகை கொடுக்கிறது. ஆனால் இப்பொழுது கொடுக்கும் தொகை குறைவானது, ஒரு நோயாளிக்கு இவ்வளவு என்கிற விகிதத்தில் அதைப் பரிசீலனை செய்து, ஆண்டுதோறும் இவ்வளவு கொடுப்பது என்ற வகையில் கொடுக்க அரசு முற்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இது ஆலோசிக்கப்பட வேண்டிய ஒன்று என்று அரசாங்கம் கருதுகிறது.

1971 டிசம்பர் 18]

திரு. எம். கந்தசாமி : தலைவர் அவர்களே, தொழுநோயானது மிகக் கொடுமையானது என்று இருப்பதால், தீவிரமாகச் சிகிச்சை செய்து உதவிசெய்ய, மேலும் பரவாமல் தடுத்து நிறுத்த நம்முடைய அரசு 'வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைசேஷன்' உதவியைப் பெற முயற்சித்து, அதிக உதவியைப் பெற்று அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, 'வேர்ல்ட் ஹெல்த் ஆர்கனைஸேஷன்' மூலமாக வேறு பல உதவிகளைப் பெறலாம். ஆனால் இந்தத் துறையில் பொதுமக்களுக்குப் போதுமான தெளிவு ஏற்பட வேண்டும். ஏற்கனவே சிறுவயதிலேயேகூட சிறு புண், காயம் இவற்றிற்கு இடம் கொடுக்காமல் கவனமாக இருக்க வேண்டும். முதலிலே அப்படிக் கண்டிருந்தால், அப்படிப் பட்ட அடையாளங்கள் தெரிந்தால், சூடான எதையும் தொடாமல் இருக்க வேண்டும். அந்த வகையில் 'எஜுகேடிங் தி பப்ளிக்' என்ற முறையில் பொது மக்களுக்குத் தெளிவும், அறிவும் உண்டாக வேண்டும், அதற்குப் பிரசாரம் நடத்த வேண்டும். அந்த முறையில் அரசாங்கம் அக்கறை காட்டி வருகிறது.

சென்னை நகர வளர்ச்சி

***558 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா :

(அ) சென்னை நகர அபிவிருத்திக்கு ரூ. 136 கோடியில் திட்டம் தயார் செய்யப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) ரூ. 938 கோடிக்குத் தயாரிக்கப்பட்ட சென்னைப் பெருநகர்ப் பகுதி வளர்ச்சிக்கான இருபதாண்டுக் காலத்திட்டம், 1971 சூன் திங்களில் மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இதன் குறுகிய கால முதலீடு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ரூ. 185 கோடியாகும். இத்திட்டத்தை நிறைவேற்ற, மத்திய அரசிடமிருந்தும், உலக வங்கி போன்ற ஐக்கியநாடுகள் முகவரமைப்பிடமிருந்தும் நிதி உதவி எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, மத்திய சர்க்காருக்கு இந்தத் திட்டத்தை அனுப்பியிருக்கிறோம். அதற்கு ஏதாவது பதில் வந்திருக்கிறதா ? நிதிகொடுக்க அவர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இதுவரையில் பதில் கிடைக்கவில்லை. அவர்கள் இப்பொழுது இருக்கும் சூழ்நிலையில், இன்னும் சில திங்கள்கள் கழித்து பதில் அளிப்பார்கள் என்று கருதுகிறேன்.